# எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி


உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றுங்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவினாரும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம் ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.


கனவு 10 கற்பனை 8] திருச்சி 15—8—67 [ தனிப் பிரதி 25 காச


## சிந்தனைக்கு ...

நமது உடலில் உயிர் தங்கியிருக்கிறது. உயிர் இருக்கும்போது உடல் இயங்குகிறது. உடலுக்கு உணவும், உடையும், உறக்கம் மட்டுமே தேவை. நாம் விரும்பும் மற்ற ரசங்கள், ஈடுபாடுகள் அனைத்தும் உடலுக்குச் சம்பந்தப்பட்டவை அல்ல. உடலுக்குள் எங்கோ மறைந்திருந்து கொண்டு மற்ற எல்லாவிதமான சுகங்களை துய்த்தும் தான் அதில் பலனடையாதது போலவும், உடலுக்கு உபகாரமாகத் தான் செய்வது போலவும் இருந்து இயக்குவது மனது.

ஏமாற்றுதல் என்ற செயல் பிறந்த இடமே இந்த மனதில் தான். மற்றவர்களை ஏமாற்றுவது இருக்கட்டும். உடலை மனது ஏமாற்றி வாழ்கிறது. தனது விருப்பத்திற்கு எல்லாம் உடலை ஆட்டிப் படைக்கிறது. "எல்லாம் உனது நன்மைக்கே" என்று மனது உடலிடம் கூறி ஏமாற்றுகிறது. மனதின் விருப்பப்படி எல்லாம் உடல் ஆடி, ஓடி, களைத்து விழ்ந்து விடுகிறது, இடிந்த வீடு போல. உடல் இடிந்து போனால் உயிர் பிரிந்து விடுகிறது. மரணத்திற்குக் காரணம் இந்த மனது தர்ன். மனதை வென்றால் மரணத்தை வெல்லலாம். வெட்டப்பட்ட மரம் எத்தனை நாள் போட்டிருந்தாலும் கட்டையாக கிடக்கும். உயிர்போன உடல் கட்டை என்று சொன்னாலும் ஒரு சில மணி நேரங்களுக்குள் அழுகிப் போய் விடும். உடலைப் பற்றி வாட்டி வதைத்துக் கொண்டிருந்த வியாதிகள்கூட உயிர் போனதும் தலை தெரிக்க ஓடி விடுகின்றன.

மனதால் தான் மரணம் வருகிறது. மனது உடலைத் தூண்டி பலமற்றதாக செய்து விடுகிறது. மனது எடையும், உடலது எடையும் ஒன்றாக இருக்க வேண்டும். உடல் பெருத்தால் எப்படி இயங்குவது சிரமமோ, அப்படி மனதின் பாரத்தை தாங்க முடியாமல் உடல் அழிந்துவிடும். மனது என்பது வடக்கு. உடல் என்பது தெற்கு. சர்வேஸ்வரன் அகத்தியரை தெற்கு அனுப்பிய வரலாற்றுத் தத்துவம் என்ன? உடலையும் மனதையும் சமநிலையில் நிறுத்துகின்ற அறிவு என்னும் பேராற்றலே அகத்தியன். உடல், மனம், அறிவு ஆகிய தத்துவமே அகத்தியனுடைய பிறப்பு. அறிவால் மனதைக் கட்டுப்படுத்தி உடலை நீண்ட காலம் வளர்க்கலாம் என்ற விளக்கமே அகத்திய ஸ்வரூபம். நெடுநாள் வாழ்ந்த பாம்பு சிறிய வடிவம் பெற்று மாணிக்கத்தின் ஒளியால் தரையில் ஊறுவதை விட்டு வெளியில் பறக்கும் என்ற செய்தியை கேட்டிருப்பீர்கள். மனித வாழ்க்கையிலும் இது சாத்தியமே என்று காட்டிய முதல் சித்தன் அகத்தியன்.

அறிவால் மனதை அறிஞர்கள் அடக்கலாம். சாதாரண மக்கள் இறை பக்தி ஒன்றினால் ஆசாரங்கள், பழக்க வழக்கங்கள் இவைகள் மூலம் மனதை அடக்கக் கூடும் என்ற நியதியைக் கண்டு முன்னவர்கள் இறை தத்துவத்தை விரிவுபடுத்தினார்கள். மனதை பெற்றிருப்பதால் ஒருவன் மனிதனாகிவிட மாட்டான். மனதை கட்டுப்படுத்த எவன் தெரிந்தவனோ அவனே மனிதன், மானுடன் ஆகிறான். நாம் மனிதன் ஆக வேண்டும் என்ற தவிப்பு அணையாது நம் உள்ளத்திலே நின்று ஒளிர வேண்டும். இதுவே வாழ்க்கைக்கு வழி.

— ரெட்டியார்.

# அமெரிக்கக் கவிஞர் சாண்ட்பர்க்

—[ லில்லி வீணை ]—

கார்ல் சாண்ட்பர்க் தமது இறுதிக் கவிதையைப் பாடி முடித்து விட்டார். ஆம், அமெரிக்க நாட்டின் கவிஞர் பெருமான் புகழ் உடம்பு எய்தி விட்டார்.

அவர் ஒரு கவிஞர், கதை புனைபவர், நாடோடிப் பாடல்கள் பாடுபவர், ஆபிரகாம்லிங்கன் வாழ்க்கை வரலாற்றினை எழுதிப் பரிசு பெற்ற வரலாற்று அறிஞர். சுருக்கமாக, அவர் ஒரு இலக்கியக் கோயில். அமெரிக்காவில் வட கரோலினா மாநிலத்தில் ஃபிளாட்ராக் என்னுமிடத்திலுள்ள தமது மலை வீட்டில் சாண்ட்பர்க் சமீபத்தில் காலமானார். அவருக்கு வயது 89. இறுதி நாளில் அவர் தம் மனைவியோடும், மூன்று புதல்விகளில் இருவரோடும் தனிமையில் வாழ்ந்தார்.

நாட்டின் கவிஞர் பெருமான் என்ற புகழுக்கு வேறு யாரையும் காட்டிலும் அவரே உரியவர். அவரது மறைவு குறித்து வருத்தம் தெரிவித்து விட்டு, அவருக்குப் புகழ் மாலை சூட்டி மரியாதை செலுத்துவதில் நாட்டுக்கே வழி காட்டினார் ஜனாதிபதி ஜான்ஸன்.

### ஜனாதிபதி புகழ்மாலை

"கார்ல் சாண்ட்பர்க் அமெரிக்காவின் குரல் என்று சொன்னால் போதாது – அவரே அமெரிக்கா. ஜனநாயகப் புலவன், மக்களின் எதிரொலி, நமது மனச் சான்று, உண்மையையும் அழகினையும் குறிக்கோளையும் எழுதி வைத்த எழுத்தாளர் — என அவரை நாம் அறிவோம்; அவ்வாறே போற்றி வந்தோம்" என்று ஜனாதிபதி புகழ் மாலை சூட்டினார்.

இல்லினாய்ஸ் மாநிலத்தில் கேல்ஸ்பர்க் நகரில் 1878 ஜனவரி 6-ந் தேதி பிறந்தவர் கவிஞர் சாண்ட்பர்க். ஸ்வீடன் நாட்டிலிருந்து வந்து அமெரிக்காவில் குடியேறியவர்கள், அவரது பெற்றோர்கள். இளமையிலிருந்து அவரது பேச்சில் கவிதை மிளிர்ந்தது. கோதுமை வயல்களில் வேலை பார்த்தார்; நகர உணவு விடுதிகளில் பாத்திரங்கள் கழுவினார்; நாட்டையும் மக்களையும் பற்றி அறிய நாடு முழுவதும் சுற்றித் திரிந்தார்.

உழைத்துப் பொருளீட்டிக் கல்லூரியில் படித்தார். பின்னர் சிக்காகோ நகரில் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டார். இதற்கு முன்பு, 1904ல் அவரது செய்யுள்களில் சில ஒரு சிறு தொகுப்பாகத் தனிப்பட்ட முறையில் வெளியாயின. ஆனால் 1914ல் தான் "கவிதை" (பொயட்ரி மாகஸின்) ஏடு அவரது சிறு கவிதைகள் பலவற்றை வெளியிட்டது. அவற்றில் ஒன்று "சிக்காகோ". இது இரு ஆண்டுகள் கழித்து வெளியான "சிக்காகோ செய்யுள்கள்" என்னும் தொகுப்பில் இடம் பெற்றது.

பச்சை பச்சையான வழக்கு மொழியில் அமைந்த இச் செய்யுட்கள், நகரின் இரைச்சலையும், வெயில் குளிக்கும் புல்வெளியின் அழகையும், "சிறிய மனிதனின்" வலிமையையும் ஆற்றலையும் பறைசாற்றின. இது கண்டு பலர் சீற்றமுற்றனர். குறிப்பாக, சிக்காகோ வாசிகள் அதிர்ச்சியுற்றனர். ஏனெனில் "உலகின் கசாப்புக் கடை" என்று அவர்களது ஊரைக் கவிஞர் வருணித்திருந்தார். ஒளிவு மறைவில்லாமல் அவர் கையாண்ட மொழியும் மரபுக்கு மாறுபட்ட சந்தமும் ஒரு பெரும் சொற்போரை மூட்டி விட்டன; எனவே விரைவில் சிக்காகோ ஆசிரியர்கள் வட்டத்தில் அவர் ஒரு "சிறப்புப் புள்ளி" ஆகி விட்டார்.

கொச்சை மொழிகள் உள்பட அமெரிக்காவில் அன்றாடப் பேச்சு வழக்கில் இருந்த சொற்களைத் தாம் கையாண்டதே சரி என்று அவர் வாதித்தார். "வரிந்து கட்டிக் கொண்டு, கரங்களில் உமிழ்ந்து விட்டு, உழைப்பில் குதிப்பது கொச்சை மொழி தான்" என்று அவர் விளக்கம் கூறினார்.

### மக்கள் கவிஞர்

எனினும் இந்த முரட்டுப் பண்புக்கிடையிலும் அன்றாட வாழ்க்கையில் நிலவிய அழகை அவர் துய்த்தார், வருங்காலத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டார். "புல்வெளி" என்ற அவரது கவிதையில் வரும் இந்த வரிகள் அவரது பண்புகளை விளக்கும் :—

"புதிய நகரங்கள், புதிய மக்களைப் பாடுகின்றேன்,
கடந்த காலம் சாம்பல் குவியல் எனக் கூறுகின்றேன்.
நேற்று என்பது வீசி ஓய்ந்த காற்று,
அது மேற்கில் வீழ்ந்த கதிரோன்,
நாளை நாளை என்னும் பெருங் கடல்கள்,
நாளை நாளை என்னும் விரி வான்கள்,
இவையன்றி உலகில் வேறெதுமில்லை,
என்று உங்கட்குக் கூறுகின்றேன்,
வெள்ளி முளைத்ததும், "நாளை
ஒரு திருநாள்" என்று கூறி மகிழும்
நல்ல குடியானவரின் தோழன் நான்".

கவிஞராக அடி நாட்களில் அவர் பெற்ற புகழ் ஒரு புறமிருக்க, ஆறு தொகுப்புக்களாக அவர் எழுதி வெளியிட்ட ஆபிரகாம் லிங்கன் வாழ்க்கை வரலாற்று நூல் தான் 1940ல் அவருக்கு முதல் தடவையாகப் புலிட்ஸர் பரிசினைப் பெற்றுத் தந்தது. இது ஒரு அரும்பெரும் ஆராய்ச்சி நூலாகும். "புல்வெளிக் காலம்" என்ற பெயரில் வெளியான முதல் இரு தொகுப்புகள் (1926), மறைந்த மாவீரர் ஜனாதிபதி லிங்கனின் இளமைப் பிராயத்தை எடுத்துரைக்கும் காவிய ஓவியமாகும்.

இளைஞர் லிங்கன் பற்றிக் கவிஞர் எழுதினார் :– "மரங்களின் மத்தியில், ஒளி வீசும் மழைத் துளிகளைத் தாங்கிய புதர்களிடையில், இலையுதிர்க் காலத்தில் வாடி எரியும் செடி கொடிகளின் ஊடே, வாடைக் காற்றோடு வடக்கு தெற்காக நீந்திச் சென்ற காட்டு வாத்துக்களின் ஒலியின் சூழலில், திறந்த வானிடை, மழையிடை அவர் வாழ்ந்தார்".

"முழுமைக் கவிதைகள்' என்ற செய்யுள் நூலுக்காக 1951ல் அவர் இரண்டாவது தடவையாகப் புலிட்ஸர் பரிசு பெற்றார்.

மொத்தம் அவர் 30 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். செய்யுள் தொகுப்புகள், நாடோடிப் பாடல்கள், குழந்தைக் கதைகள், தம் இளமைக் காலம் பற்றி ஒரு சுய சரிதை, ஒரு நாவல் முதலியன அவற்றில் அடங்கும்.

அவர் நோய் வாய்ப்படும் வரையில், அடிக்கடித் தொலைவிலுள்ள இடங்களுக்குச் சென்று பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதுண்டு. பொது மக்களுக்கு நன்கு தெரிந்த ஒரு நிகழ்ச்சி, அவரே நேரில் தோன்றி விரிவுரைகள் ஆற்றுவதும் நாடோடிப் பாடல்கள் பாடுவதுமாகும்; அவரே 'கித்தார்" வாசித்துக் கொள்வார்.

### மாஸ்கோப் பயணம்

ஆபிரகாம் லிங்கனுக்கு அஞ்சலி செலுத்திய ஒரு டெலிவிஷன் நிகழ்ச்சியில் விளக்கம் கூறுபவராக அவரே ஒரு சமயம் பங்கு கொண்டார். விடுதலை வீரர் லிங்கனின் இளமைப் பற்றிய நிகழ்ச்சிகளை நினைப்பூட்டிப் பேசினார்; ஒரு வரலாற்றாசிரியர் தான்

7-ஆம் பக்கம் பார்க்க

# எழுத்தாளன்

கனவு 10] பிலவங்க, ஆவணி 15-8-67 [கற்பனை 8


## சுதந்திர வேண்டுகோள்!

நிலையான சத்தியத்தின் வாகனமாக சொற்கள் உதிக்கின்றன. ஒலிக்கின்ற சொற்களின் சொந்த வடிவம் ஒளி. ஒளி — ஒலியாக நமக்குக் கேட்கிறது. மனஸ் — உடல் — அறிவு உறவினை அறிந்து, அறிவின் பலத்தால் புலன் உணர்வுகளை சிதறவிடாமல் தேக்கி வைப்பவன் எவனோ, அவனே புலவன். புலவன் என்பது பட்டமோ, படிப்போ தருவது அல்ல. சத்தியத்தின் ஒலிவடிவை தனது சிந்தனையில் தாங்கும் புலன்களின் ஆற்றலே புலமை.

ஆதவன் ஜோதியை அப்படியே தாங்கும் வலிமை நமக்கு இல்லை. தூரத்தாலும், மற்ற ஈர்ப்புக்களாலும் சூரிய ஒளி நமக்குக் கிட்டும்போது மெலிவடைந்து வருகிறது. அதனைத் தாங்கும் வலிமை கூட நமக்கு இல்லை. சூரிய ஒளியைத் தான் வாங்கி நமக்குக் குளிர்ந்த ஒளியைத் தரும் சந்திரன் போல சத்தியத்தின் முழு ஒளியைத் தான் வாங்கி அதனில் ஈரமாகிய தன் அனுபவத்தைக் கலந்து உலக மக்களுக்கு வழங்குபவர்கள் எழுத்தாளர்கள்; கவிஞர்கள். சுருக்கமாகச் சொல்வதென்றால் சத்தியத்தின் வீறு நிறைந்த ஒளியைத் தான் வாங்கி ஒளியை விழுங்கி ஒளியை உமிழும் ஆற்றல் உடையவனே கவிஞன், எழுத்தாளன்.

ஆகாயகங்கையின் பேராற்றலை தனது ஜடாமகுடத்தில் தாங்கி வையத்திற்கு அமிர்த கங்கை எம்பெருமான் வழங்கினார் என்று படித்திருப்போம். அதே தத்துவம்தான் எழுத்துக் கலை சத்தியத்தின் வீறுகொண்ட ஒளியைத் தனது புலன் உணர்வுகளால் தேக்கி அடக்கி அதனை மக்களின் உள்ளத்திற்குப் புரியுமாறு விளங்குமாறு எழுத வல்லவன் சொல்ல வல்லவன் எழுத்தாளன்.

சொற்கள் சத்தியத்தின் வாகனம் என்று சொன்னோம். நமக்குப் புரிகின்ற வகையில் இதனை விளக்குவதென்றால் சொல் ஒரு பழம். சொல்லின் உள்ளே வாக்கு என்பது பொதிந்து கிடக்கிறது. சொல்லே வாக்காகிவிடவில்லை. சொல் வேறு வாக்கு வேறுதான். என்றாலும் சொல் என்று சொல்லும்போது அதன் உள்ளே பொதிந்திருக்கும் வாக்கே மனத்தற்கு புத்துணர்ச்சியைக் கொடுக்க வல்லது. எங்கும் நிறைந்த சத்தியம் வடிவில்லாதது. அதனை வாக்கு என்ற உருவத்தைக் கற்பித்து சொல் என்ற வாகனத்தில் சுமந்து வருகின்ற பல்லக்குத்தூக்கிகளே எழுத்துக்கள். பல்லக்குத் தூக்கிகளாக அனைவரும் ஆகலாம். ஆனால் அவர்களின் தோளில் சொல் என்ற வாகனமும், வாக்கு என்ற உற்சவரும் இருக்கவேண்டும்.

சொல்லுக்குள் சொல் சொருகிக் கிடக்கிறது. அதனை விரித்து ஆராய்ந்தால்தான் உண்மை தெரியும். விரித்துப் பார்க்கும் ஆற்றல் மொழிப் பண்டிதர்களுக்கு இருக்க வேண்டும். இத்தகைய ஆற்றல் படைத்தவர்களே உரையாசிரியர்கள், பாஷ்யக்காரர்கள்.

சத்தியத்தின் ஒளி எல்லோருக்கும் தெரியும். இறைவன் தந்த சக்தியை சிதற அடித்துவிடுபவர்கள் குருடர்களாகி விடுகிறார்கள். "வையத்தில் அன்னை பராசக்தி தந்த வண்மை எல்லாம் ஐயத்திலும் துரிதத்திலும், சிந்தி அழிவதென்னே, பையத்தொழில் செய் நெஞ்சே" என்று பாரதி ஆதங்கப்படுகிறார்.

மனதில் பாரம் ஏற்றாமல் இருந்தால் உடல் கனக்காது. உடல் கனக்காவிட்டால் தெளிந்த மனது விரும்புகிறபடி உடல் சேவை செய்யும். நப்பாசை இல்லாத மனம் படைப்பதே மானிடப்பேறு பெற்றிருப்பதின் மகத்துவம். மானிடப் பேறு பெற்றும் மனத்தின் நப்பாசை ஏற்பட்டு விடுமானால் உடல் அழியும். வாழ்க்கை அழியும். பயனற்ற வாழ்க்கையாகிவிடும்.

மனத்தின் நப்பாசை தனி மனிதனை திருட வைக்கிறது. பொய் பேச வைக்கிறது. தவறுகளை யெல்லாம் செய்ய வைக்கிறது.

ஆட்சியில் உள்ளவர்களின் நப்பாசையாலே அடக்குமுறையும், பிற நாடுகளின்மீது போர் தொடுக்கும் எண்ணமும் ஏற்படுகிறது. மனத்தின் நப்பாசையின் விளைவே பயங்கர ஆயுதங்கள். மனித மனம் எவ்வளவு பயங்கரமானது என்பதை தெரிந்துகொள்ள வேண்டுமானால் போர்களத்தில் உபயோகிக்கும் ஆயுதங்களைப் பார்த்துத் தெரிந்து கொள். மனது பண்படுத்தப்பட்ட பிறகு, அதன் நப்பாசை அகன்ற பிறகு அது எவ்வளவு நல்லது என்பதை அறிந்து கொள்ளவேண்டுமானால் இலக்கியங்களைப் பார் என்று தெளிவாகக் கூறலாம். எனவேதான் நம் முன்னவர்கள் போர் ஆயுதங்களைச் சேர்த்து வைக்காமல் நப்பாசை அகன்ற மனத்திலிருந்து பிறந்த இலக்கியங்களை நமக்குச் செல்வங்களாக சேர்த்து வைத்தார்கள்.

பாரத நாடு சுதந்திரம் பெற்று இருபது ஆண்டுகள் ஆகிவிட்ட பெருமிதத்தில் விழா எடுக்கிறோம், மகிழ்கிறோம். நாட்டில் அரசு ஓச்சுவோர் அயர்ந்திருக்க முடியவில்லை. புதுப் புது விதமான போராட்டங்கள் தோன்றுகின்றன. நப்பாசையால் எது எதுவோ நிகழ்கிறது. மக்களுக்குக் கல்வி கொடுத்தோம், இருக்க வசதியான வீடுகளும் கட்டிக் கொடுத்தோம், உணவு உற்பத்திக்காக பற்பல அணைகள் கட்டினோம், தொழில் அபிவிருத்திக்காக பற்பல தொழிற்கூடங்கள் நிறுவினோம் என்றாலும் நாட்டில் சுபிட்சம் இல்லாதது ஏன் என்று அறிஞர்கள் சிந்திக்கவேண்டும்.

மக்கள் மனதை பண்படுத்துகின்ற செயலை அரசு செய்யத் தவறிவிட்டது. அறிஞர்கள் செய்யத் தவறிவிட்டார்கள். சமயத் தலைவர்களும் கைநழுவிவிட்டார்கள். எழுத்தாளர்களும் கவிஞர்களும் அடிப்படையை மறந்து மேலெழுந்தவாரியாக இடைக்காலத்தில் குறுநில மன்னர்களையும், அவர்களது ஆண் அழகையும் கொடையையும் புகழ்ந்து பாடியது போல, சிறிது கற்று வெளிவரத் தொடங்கிய பிஞ்சு உள்ளங்களின் மனத்தில் வெறி ஏற்படத்தக்க கற்பனைகளை உருவாக்கி விற்றுப் பிழைக்கும் நிலைக்கு மாறிவிட்டோம். அதனாலே சம்பந்தப்பட்டோ படாமலோ, சிந்தனையாளர்களும் எல்லோரையும் போல துக்கப்பட வேண்டியிருக்கிறது.

சுதந்திரத் திருநாளில் ஒரு சபதம் எடுப்போம். நமது மனதில் நப்பாசைக்கு இடம் கொடுக்கமாட்டோம்; சத்தியத்தின் ஒளி நமது மனத்தில் பதியும்படி புலன்களின் சக்தியைத் தேக்கி புதுவாழ்வு பெறுவோம்; மற்றவர்களையும் அவ்வழியிலே அழைத்துச் செல்வோம் என்று உறுதி பூணுவோம். இது நமது சொந்த வாழ்வுக்குமட்டுமல்ல, உலகம் பூராவும் சுபிட்சம் அடைவதற்கு உள்ள வழி.

எந்த சத்தியத்தையும் வாக்காலும், வாக்கை உள்ளடக்கிய சொற்களாலும், அவைகளை சுமந்து வருகின்ற எழுத்தால் தான் சொல்லவேண்டியிருக்கிறது. அந்த வழியை அறிந்து பீடுநடை போடும் எழுத்துலக வேந்தர்கள் இதனை சிந்தித்தால் நாடு நலம்பெறும். நல்ல வாழ்வு எல்லோருக்கும் கிட்டும் இதுவே தமிழ் எழுத்தாளனின் சுதந்திர தின வேண்டுகோளாகும்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி,
ஆசிரியர்.

ரேடியோ நாடகம்

# "ஆண்டியின் இதயம்"

[எம். எஸ். கோபால்]

★

[சென்ற இதழ் தொடர்ச்சி]

மிரா : [கோபத்துடன்] மகாலட்சுமி நீ உள்ளே போறியா இல்லையா

மகா : நீங்க உள்ளே போங்கப்பா நான் பரதேசிக்குப் பிச்சை போட்டுட்டுதான் வருவேன்.

மிரா : உன் பிடிவாதத்துக்கு பதில் சொல்ல முடியாது. தாயில்லாப் பிள்ளை.

மகா : இந்தா இன்னையப் பொழுதுக்கு நாளைக்கு சாயந்திரம் வா அப்பா வீட்டிலே இருக்க மாட்டார்.

பழ : தாயே நீ இருக்கும் வரை எனக்கு கவலையில்லை கந்தன் கருணை புரிவார்.

[காலப்போக்கு இசை]

சிவ : என்ன சாமி அசந்துபோய் உக்காந்திருக்கு. பசிமயக்கமா இல்லே புகை மயக்கமா

பழ : மன மயக்கம்.

பர : அதென்ன ஆண்டிகளுக்கில்லாத மயக்கம் சாமி எங்கேயாவது தொல்லையிலே மாட்டிகிட்டுதா

பழ : சாமி என் நிலைமை தெரியாம பேசுது எனக்கு பைத்தியம் பிடிச்சுடும் போலிருக்கு.

சிவ : சாமி விஷயத்தைச் சொல்லாம

பழ : விஷயம் என் பிழைப்பிலே மண் விழுந்துட்டது சாமி.

பர : ஏன் என்ன நடந்தது மிராசுதார் ஏதாவது வம்பு இழுத்துவிட்டுட்டாரா

பழ : அப்படி எல்லாம் ஒண்ணுமில்லே அவரு கூட மாறிட்டாரு ஆனா என் தாய் மகாலட்சுமி ஊரை விட்டு போவுது என் இதயமே வெடிச்சுடும் போலிருக்கு

பர : சாமி சரியான பைத்தியம் பெண் குழந்தை கல்யாணமானா புருஷன் வீட்டுக்குப் போகாம இங்கேயே இருந்து உமக்கு தினமும் பிச்சை போடுமா என்ன

பழ : போகட்டும் சாமி போகட்டும் போயிட்டா நான் எப்படிப் பிழைப்பேன் சாமி அந்த மகாலட்சுமியை எப்படி மறப்பேன்

சிவ : சாமி மரம் வைச்சவன் தண்ணி ஊத்துவான் கவலைப்பட வேண்டாம் நான் இருக்கேன் நமது திட்டமும் இருக்கு.

பர : திட்டம் இன்னும் முடியலையா

சிவ : ஆரம்பமே இப்போதுதான் தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம். இதுதான் திட்டத்தின் லட்சியம் இருக்கிற உணவை எல்லோருக்கும் கொடுக்க வேண்டும்.

பர : அதெப்படி முடியும் இருக்கிறவங்க கொடுக்கணுமே.

சிவ : அதற்குத்தான் நமது திட்டம் உதவப்போகுது யோசித்துப் பாருங்க நம்மைப்போல் பசியால் வாடித்திண்டாடுவோர் ஒரு பக்கம் தின்ன முடியாமல் திண்டாடுவோர் கூட்டம் மற்றொரு பக்கம் இந்த நிலைமை ஒழியவேண்டும் மாறவேண்டும் அதற்கு நமது சங்கம் நேரடி நடவடிக்கைஎடுக்க வேண்டும்.

பர : என்ன நடவடிக்கை

சிவ : அதுதான் ஸ்ட்ரைக்கும் ஊர்வலமும்.

பழ : சாமி பிச்சைக்காரர்கள் வேலை நிறுத்தம் செய்தால் யாருக்கு நஷ்டம்

சிவ : அதைப் பற்றிக் கவலையில்லே அவை நம் கண்டிப்பைத் தெரிவிக்கும் ஆயுதங்கள் அப்போதுதான் நமக்கு விளம்பரம் கிடைக்கும் பத்திரிகைகள் பத்தி பத்தியாய் நம்மைப்பற்றி எழுதும் அதோடு முடியவில்லை குறிப்பிட்ட தினத்தில் மாபெரும் மகாநாடு அதற்கு நாட்டிலுள்ள பண்டாரம் பரதேசிகள் எல்லாம் கூட்டம் கூட்டமாய் வந்துசேர வேண்டும்.

பழ : எப்படி வந்து சேருவது ?

சிவ : சர்க்கார்ரயிலிருக்கு,காரிருக்கு, நமது காலிருக்கு.

பழ : அது சரி காசிருக்கா ?

சிவ : காசு எதற்கு எல்லாம் ஓசு

பழ : சும்மா ஏறினா, நம்மை சும்மா விட்டுடுவாங்களா ?

பர : தடுத்தால் தண்டவாளத்தில் படுத்து சத்தியாக்கிரகம், பிறகு பார்க்கலாம்.

பர : ரயிலும் காரும் நம்ம மேலே ஏறி போறதை எப்படி பார்க்க முடியும் சாமி

சிவ : அப்படித் துணிஞ்சு ஏற்றமாட்டார்கள்.

பழ : சாமி யோசனை பூராவும் சொல்லட்டும்.

சிவ : அப்புறம் கூட்டம் நடக்கும்.

பர : அதோடு கூச்சலும் குழப்பமும் நடக்கும்.

சிவ : காரசாரமான தீர்மானங்கள் நிறைவேறும் பரதேசிகள் நிலைமை உயர வேண்டும். இருக்கும் உணவை எல்லோருக்கும் பகிர்ந்து வழங்க வேண்டும் பாரில் பசியும் பட்டினியும் ஒழிய வேண்டும்

பர : அதோடு பிச்சைக்காரர்கள் என்ற இனமே ஒழியவேண்டும். இப்படி கூச்சல் போட்டுவிட்டு அடுத்த நாள் பிச்சைக்குப் போக வேண்டும்.

சிவ : இல்லை. இந்தத் தீர்மானங்கள் சர்க்காருக்கு அனுப்பப்படும். அதோடு நமது கோஷ்டி ஒன்று மந்திரிகளைப் பேட்டி கண்டு நமது கஷ்டங்களை நேரில் கூறி நிவர்த்திக்கான வழி வகை தேட வேண்டும். நமது நலத்தைக் காக்க தனி இலாக்காவும் கோர வேண்டும்.

பர: நாம் கேட்கிறதெல்லாம் கிடைச்சா நாம பரதேசிகளா இருக்க மாட்டோம்.

பழ: நம்ம நிலைமை உயர்ந்துட்ட துன்னு நெறைய பேர் இந்த தொழிலுக்கு வந்துடுவாங்களே

பர: இருந்தாலும் சாமிக்கு பழுத்த அரசியல் அனுபவம் போலிருக்கு. ரொம்ப தீவிரவாதியா இருக்கே

சிவ: அதனுல் தான் இந்தக் கதி இந்தக் காலத்திலே உண்மையைச் சொன்னு ஒருத்தருக்கும் பிடிக்காது. ஆபத்தும்கூட.

பர: சரியான உண்மை.

சிவ: நான் ஒரு அரசியல் கட்சியிலே இருந்தேன் போக்கு பிடிக்கவில்லை பட்டதைச்சொன்னேன் வெட்டொன்று கிடைத்தது பரிசு, தலை மறைவு இந்த வேஷம் கொஞ்ச காலம்.

பழ: அப்போ உங்க ஆண்டிவேஷம்

சிவ: வெளி வேஷம்.

பர: ஆப்படிச் சொல்லுங்க அது தானே பார்த்தேன் சும்மா இருக்கிற பரதேசிகளை கட்சி சேர்க்கணும் கலாட்டா பண்ணணும்னு தூண்டி விடுருரு போதுமய்யா போலிச்சாமி யாரே உம்முடைய சகவாசம் பழைய இடத்துக்கே போய்ச் சேரும் நாங்கள் பிழைக்கணும்.

பழ: என்ன பரமானந்தரே என்னுல் நம்பவே முடியவில்லை ஆண்டிகள் மடம் கட்ற கதைன்னு சொல்றது பொருத்தமாகி விட்டது.

பர: சாமி எதைச் சொல்லுது

பழ: புரட்சிச்சாமி சொன்னதும் கடைசியில் செய்ததும்.

பர: போட்டது வெறும் கூச்சல் அது நமக்கு எச்சரிக்கை போலியைக் கண்டு ஏமாறக் கூடாது.

பழ: நம்பினுல் மோசம்–இந்த மாதிரி ஆட்களால் ஆண்டிகளுக்கு ஆபத்து.

பர: யார் நல்லவர், யார் கெட்டவர், எது மெய், எது பொய்னு அறியறதே கஷ்டமாயிருக்கு சாமி.

பழ; பொய்யும் மெய்யாகத் தோற்றமளிக்கிறது.

பர: அதை நம்பினுல் ஏற்படுவது மோசம்.

பழ: வெறும் தோற்றத்தை நம்பினுல் ஏமாற்றம். அதைத் தான் மாயை என்று சொன்னுர்கள் மகான்கள். கானல் நீரைக் காண பண்படாத மனம் நம்மை பற்றி இழுக்கிறது பாருங்கள். மாயையை நம்பி மனம் போனுல் விளைவது நாசம். எனவே தான் மனப்போன போக்கெல்லாம் போக வேண்டாம் என்றுர்கள்.

பர: மனக் குரங்கு என்று சும்மாவா சொன்னுங்க.

பழ: மனம் ஒரு குரங்கு தான். குரங்குப் பிடி மாதிரி இந்த மனமும் பிடித்ததை விடாது. அதன் பிடியில் சித்தரும், முனிவரும் கூட சிக்கித் தவித்தனர். அரசனுயினும் சரி, ஆண்டியாயினும் சரி மனத்தைமட்டும் அடக்கி ஒடுக்கி விட்டால் துன்பமே வராது.

பர: அது ஒரு அடங்காப் பிடாரி சாமி.

பழ: அதை அடக்க ஒரே வழி, அது தான் ஆண்டவன் தியானம்.

பர: முருகப்பரே நான் ஆண்டிப் பிழைப்பை ஏற்றும் ஆண்டவனை அதிகம் நினைத்ததில்லை. தினமும் அன்ன விசாரம். அதுவே விசாரம்.

பழ: பரமானந்தரே ஆண்டியாயினும் ஆசாபாசங்களுக்கு அடிமையே. இருந்தாலும் இறைவனை எண்ணுமலிருப்பதற்கு உளப் பிணி காரணம். அந்தப் பிணி நீக்கும் மருந்து பரமனருள். பரமானந்தரே, அவன் அருளை நாடும், பிணி அகலும்.

பர: முருகப்பரே உண்மையில் இன்று தான் நான் உடலெடுத்த பயன் பெற்றேன். உமது உபதேசம் எனக்கு என்றும் உதவும்.

பழ: பரமானந்தரே, எப்படியோ இங்கு வந்து சேர்ந்தேன் ஏன் வந்தேன் என்று எனக்கே தெரியாது. உங்களோடு சில காலம் சேர்ந்து வாழ்ந்தேன். அன்பையும் ஆதரவையும் தந்தீர்கள். என் மனம் வேறு இடத்தை நாடுகிறது. ஆகவே நான் உங்களைப் பிரிந்து போகிறேன்.

பர: சாமி ஆண்டிகளுக்கு எந்த இடமும் நிரந்தரமில்லை. எங்கிருந்தோ வந்தீர். எங்கோ போகிறீர்.

[காலப் போக்கு இசை, ரயில் ஓடிக் கொண்டிருக்கும் சப்தம்].

பிர: சாமி, எந்த ஊருக்குப் போவுது.

பழ: சொந்த ஊருன்னு எதுவுமில்லை ஆண்டிக்கு ஏது சொந்தம். மனம் போகும் வழி கால் செல்லும்.

பிர: தனிக் கட்டை இஷ்டப்படி போகுது. என்னைக் கேட்டா பெண்டாட்டி பிள்ளைகள் சொந்தக்காரன் பிடுங்கல் இல்லாம தனியா சுதந்திரமா இருந்தா எவ்வளவோ சுகம்.

பழ: சுகமும் துக்கமும் மனசைப் பொறுத்திருக்கு நெறையபணம் இருந்தால் மட்டும் சுகம் காண முடியாது. பணத்தைக் கட்டுவதைக் காட்டிலும் மனத்தைக் கட்டணும்.

பிர: பணம் இருந்தாலும் சுகம் கிடைக்கலே சாமி. அந்தப் பணத்துக்கு மேலே பணம் எப்படிச் சேர்க்கிறது சேர்ந்த பணத்தை எப்படி கட்டிக் காக்கிறதுங்கிற கவலையே பெரிசாப் போச்சு மன நிம்மதியே இல்லை சாமி.

பழ: ஆண்டவன் துணையை நாடணும். அவனை நினைத்தால் அமைதி கிடைக்கும்.

பர: அதுக்குத் தான் சாமி நான் இப்போ பழநிக்குப் போறேன். உண்டியல் கட்டிப் போட.

பழ: பழநியப்பன் உனக்கு அருள் புரிவான்.

பிர: அதோ பழநி ஆண்டவன் கோயில் கோபுரம் தெரியுது சாமி. பழநி வருது சாமி.

பழ: ஆகா என்னப்பன் தண்டபாணித் தெய்வம் எழுந்தருளிய ஸ்தலம். அவன் திருவடி போய் எப்போது சேருவேன்.

டி. ப.: டிக்கட், டிக்கட், டிக்கட்.

பழ: இல்லை அப்பனே.

கடைசி பக்கம் பார்க்க

# வள்ளுவர் கோபம்

—[ S. அருள்தங்கம், B. Sc. ]—

ஒரு நாள் வள்ளுவ மகா கவி தெரு வழியே போய்க் கொண்டிருந்தார். அப்பொழுது வறிஞன் ஒருவன் வீடு வீடாக பிச்சை கேட்டுக் கொண்டே வந்தான். அந்தக் காட்சி வள்ளுவரை மிகவும் உருக்கியது. 'பிச்சை எடுப்பது எவ்வளவு இழிவானது' - என்று நாணமுற்றார்.

அடுத்த தெருவில் வேறொருவன், பசியால் வாடி வதங்கி கண்கள் குழி விழுந்து காணப்பட்டான். அவன் இதுவரை பிச்சையெடுத்தே அறியாதவன். இன்றுதான் முதன் முதலாகப் பிச்சையெடுக்கத் துணிந்தான். இருந்தாலும் அவனை தன்மானம் தடுத்துத் தயங்கவைத்தது. ஆற்றவொண்ணா துயரத்தோடு ஒரு கனவான் வீட்டு முன் நின்று பிச்சை கேட்கிறான். குரல் வெளிவரவில்லை. கண்களில் நீர் தாரை தாரையாக வருகின்றது. தட்டுத் தடுமாறி கை நீட்டிக்கேட்டு விட்டு கூனிக் குறுகி நிற்கிறான்.

அந்த வீட்டுத் தலைவன் வாசற்படியில் நின்று கொண்டிருக்கிறான். பிச்சை கேட்பதை அறிந்த அவன், கோபமடைகிறான். ஒரு வேளைப் பசி தீர்க்கத் தான், தன்னுடைய மானம், மரியாதை அனைத்தையும் விட்டு விட்டு, பண்பு கெட்ட நிலையாக நின்று வறிஞன் இரக்கிறான் என்பதை அவன் அறிந்தேயிருந்தான். இருந்தாலும் கொஞ்சம்கூட இரக்கம் இல்லாமல் 'இல்லை' என்று கூறி விடுகின்றான்.

'இல்லை' என்ற சொல்லை பிச்சைக்காரன் கேட்கிறான். அடுத்த கணமே அவன் உயிர் அவனை விட்டுப்பிரிகிறது. பட்டுப் போனமரமாக அவன் மண்ணில் சாய்கிறான். இந்த துயரக் காட்சி வள்ளுவரை உருக்கி விடுகிறது. எனவே விரைவாக விட்டை நோக்கி நடந்தார்.

சிந்தித்தார். உலகத்தை உண்டாக்கியவன் இறைவன். மக்களின் வாழ்க்கை நியதிகளுக்கு அவனே காரணம். அவன் ஏன் கொடியவனாக இருக்கிறான்? அவனுக்கு பிச்சை எடுப்பது இழிவானது என்று தெரியாதா? தெரிந்துமா இதைத் தொடர்ந்து செய்து வருகின்றான்?

மனிதன் வாழ்க்கைக்குத் தேவையானது உணவு, நீர், காற்று, உடை ஆகியவையே. நீரைப் பொதுவாக வைத்தான். காற்று இலவசமாகக் கொடுத்தான். உடையைப் பற்றிக்கூட அவ்வளவு கவலையுறத் தேவையில்லை. ஆனால் உணவு......... பசி வந்தால் பத்தும் பறந்து விடுகிறதே. அதைத் தெரிந்தும்கூட ஏன் அதைப் பொதுவாக வைக்கவில்லை? திறமையுள்ளவர்கள் சேமித்து வைத்துக் கொண்டு விடுகிறார்கள். திறமையில்லாதோர் ஏழ்மையுறுகிறார்கள். ஏழ்மையின் காரணமாகப் பசி வருகிறது. பசிக்குச் சோறு கிடைத்தால் இரப்பவன் எவனும் இரப்பதைப் பற்றி, கனவுகூட காணமாட்டான். காற்றையும், நீரையும் பொதுவில் வைத்து, உணவை மட்டும் வைக்காதது அவன் குற்றமே! வள்ளுவர் கோபமுற்றார்.

இறைவன் உலகைப் படைத்துக் காப்பதாக முதுமறைகள் கூறுகின்றன. உலகத்தைப் படைத்து விட்டான். அதில் பல ஏற்றத்தாழ்வுகளைச் செய்து விட்டான். பிறகு, எங்கோ ஓரிடத்தில் நிம்மதியாக உட்கார்ந்து கொண்டு மண்ணிற்கு வருவோரின் தலை விதியை மட்டும் நிர்ணயிக்கிறான் போலும். அவ்வாறாயின், படைக்கும் தொழில் செய்யும் பொழுது, இன்னின்னவர் இரந்துண்டு தான் உயிர் வாழ வேண்டும் என்று அவன் விதித்துக் கொண்டு தானிருப்பான். அவ்வாறு அவன் விதிப்பதின் பயனை அறிவானோ? தெரியாது. விளைவைத் தான் உணர்ந்திருப்பானோ? நிச்சயமாக இருக்க முடியாது. இரத்தலின் கொடுமையை அறியாது, இன்னின்னவர் இரக்க வேண்டும் என்று படைப்பானா?

எனவே படைப்பதை விட்டு விட்டு மண்ணிற்கு வரட்டும். இரந்துண்டே வாழ வேண்டும் என்று ஒரு சாராரைப்படைத்தானே அவர்களுள் இவனும் ஒருவனாக அமையட்டும். அவர்கள் வாழுமிடத்திலேயே வாழட்டும். மானத்தை மறைக்கத் துணியில்லாமல் நாணமுறட்டும். ஆற்ற முடியாத பசிப் பிணியால் அல்லலுறட்டும். பசியின் கொடுமையைத் தீர்க்கக் கையில் 'திரு'வோடு ஏந்தி தெருவோடு போகட்டும்.

தெருத் தெருவாக, வீதி வீதியாக மானத்தை விட்டு, பண்பு கெட்டு பிச்சை கேட்கட்டும். அலையட்டும். அலைந்து திரிந்து கெட்டொழியட்டும். யார் யாரை சுக போகத்தில் 'புரளுக' என்று ஆசீர்வதித்து அனுப்பி வைத்தானோ, அவர்கள் வாயாலேயே 'இல்லை' என்று கேட்டுத் துடித்து துன்புறட்டும். அடிபட்டு, உற்ற பிணியால் அல்லலுற்று, எடுத்த இவ்விழி பிறவிக்காக அழுது, பசியால்நொந்து, மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்து, நாதியற்றுக் கேட்பாரேயில்லாமல் துடிதுடித்து அணு அணுவாகச் சாகட்டும். கெட்டொழியட்டும். பரந்து திரிந்து துன்புறட்டும். அப்பொழுது தான் உணர்வான் இரப்பது எவ்வளவு கொடுமை என்பதை. அவ்வாறு உணர்ந்தானாயின், இன்னின்னவர் இரக்கக் கடவர் என்று விதிக்கவே அஞ்சுவான் பாவி!;

இவ்வாறு சிந்தித்த வள்ளுவர், கோபத்தோடேயே எழுத்தாணியையும், ஓலைச் சுவடியையும் ஆத்திரத்தோடு எடுத்தார். வாசுகி அம்மையாரால் தூவப்பட்ட, அன்றலர்ந்த மலர்கள் சிதறின. ஓலையில் கீறினார்:

"இரந்தும் உயிர் வாழ்தல்
வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்".

தன்னுடைய கோபத்தையெல்லாம் இந்த ஒரே ஒரு குறளில் தீர்த்துக் கொண்டு அமைதியுற்றார். அன்று தான் கண்ட கொடுமையையும் உலகத்திற்கு உரைக்க வேண்டும் என்று எண்ணினார். மீண்டும் கீறினார்:

"கரப்பவர்க்கு யாங்கொளிக்குங்
கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஓம் உயிர்"

வள்ளுவரைவிட இரப்பைப் பற்றி இயற்கையாக உணர்ந்து எழுதியவர்கள் வேறு யாருமிலர். அவர் வாழ்ந்த காலத்தில் இரப்பவர்களடைந்த கொடுமை குறைந்துதான் காணப்பட்டிருக்க வேண்டும். அன்றைய நிலையே அவரை இந்த அளவுக்கு எழுதத் தூண்டியது என்றால், இன்றைய நிலையைக் கண்டிருப்பார் என்றால், இரவச்சத்தைப் பற்றியே ஒரு நூல் எழுதியிருப்பார். யார் கண்டார்கள் ......?

## பெருமன்றத் தலைவர்

# அ. சீ. ரா. மணி விழா

தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வரும், அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத்தின் தலைவருமான பேராசிரியர் திரு. அ. சீனிவாச ராகவன் அவர்களின் மணி விழா இம் மாதம் 3–ஆம் தேதி, வ. உ. சி. கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

பேராசிரியர் மேடைக்கு வந்ததும், நாதஸ்வரம் முழங்க, பல்வேறு ஆலயங்களிலிருந்தும், வானமாமலை மடத்திலிருந்தும் அ. சீ. ரா. அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத்தின் சார்பில் தலைவருக்கு செயலாளர் திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் பொன்னாடை போர்த்தினார்கள்.

பெருமன்றத்தின் துணைத் தலைவரும், 'கலைமகள்' ஆசிரியருமான திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. விழாக் குழுவின் தலைவரும், வ. உ. சி. கல்லூரி அமைப்பாளருமான திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்கள் விழாவுக்குத் திரளாக வந்திருந்தோர்களை வரவேற்றார்கள். கவியரங்கில் திரு. சா. கணேசன், திருலோகசீதாராம் கம்பராமன், சு. ராமசாமி, மு. உலகநாதன், அ. செகதீசன், திருமதி. சௌந்தரா கைலாசம் ஆகியோர் கவிதை பாடி சிறப்பித்தார்கள். மணி விழா கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற பிற கல்லூரி மாணவர்களுக்கும் அ. சீ. ரா. பரிசுப் பதக்கங்கள் வழங்கினார்கள்.

பிற்பகல் விழாக் குழுத் தலைவர் வரவேற்புரைக்குப் பிறகு மதுரை பல்கலைக் கழக துணை வேந்தர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் விழா தொடங்கியது. தருமையாதீனத்தின்சார்பில் திரு. சோமசுந்தரத் தம்பிரான் அவர்களும், பாப்பரசர் சார்பில் தூத்துக்குடி மேற்றிராணியார் அவர்களும் பொன்னாடை போர்த்தியும், பதக்கம் வழங்கியும் சிறப்பித்தார்கள்.

அ. சீ. ரா. இலக்கிய ஆராய்ச்சி நிறுவனத்தை திரு. சா. கணேசன் அவர்களும், மணிவிழா மலரை, பெருமன்றத் துணைத் தலைவர் திரு. ந. மகாலிங்கம் அவர்களும், அ. சீ. ரா.வின் நூல்கள் வெளியீட்டை பெருமன்றத் துணைத் தலைவர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களும், தொடக்கிவைத்தும் வெளியிட்டும் சிறப்பித்தார்கள்.

அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் விழாவை தொடக்கிவைத்தார்.

அ. சீ. ரா. இலக்கிய ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டிருப்பதும் அறிவிக்கப்பட்டது. பேராசிரியர் அவர்களைப் பாராட்டி திரு. எஸ். ராமகிருஷ்ணன் வி. கே. சி. நடராஜன், அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார், அன்பு வேதாசலம், திரு. ம. ரா. போ. குருசாமி முதலியோர் பேசினார்கள். பேராசிரியர் அ. சீ. ரா. உரை உணர்ச்சி நிறைந்ததாக அமைந்தது. இரவு 9 மணி அளவில் விழா நிறைவுபெற்றது. இரவு 10 மணிக்குமேல் பிரசித்தி பெற்ற வில்லுப் பாட்டுக் கலைஞர் திரு. பிச்சக்குட்டி அவர்களின் வில்லுப் பாட்டும் அமைந்திருந்தது.

---

### 2ஆம் பக்கத் தொடர்ச்சி

அவ்வளவு சிறப்புற விளக்கம் கூற முடியும். மற்றொரு சமயம் அவர் தம் மைத்துனரும் புகைப்படக்காரருமான எட்வர்டு ஸ்டைக்கன் என்பாருடன் மாஸ்கோ சென்று திரும்பினார், "மானிடக் குடும்பம்" என்ற புகைப்படக் கண்காட்சியை ஒட்டியே அங்கு சென்றார். அவரே இந்தக் காட்சிக்கு அறிமுகவுரை எழுதினார்.

பல அமெரிக்க நகரங்களில் கவிஞர் சாண்ட்பர்க், திரைப்பட நடிகை பெட்டி டேவிஸ் மற்றும் கலைஞர்களுடன் சேர்ந்து செய்யுள் படிக்கும் நிகழ்ச்சிகள் நடத்தி வந்தார். "கார்ல் சாண்ட்பர்க் உலகம்" என்பது அந் நிகழ்ச்சிக்குப் பெயர். சிறிது காலம் ஹாலிவுட் படவுலகில் படைப்புத் துறை ஆலோசகராகக்கூட அவர் பணியாற்றினார். ஏசு பிரான் கதையைப் படமாக்கினார்கள்; அதில் தான் அவர் அவ்வாறு துணை செய்தார்.

அவர் தம் வாழ்வில் பெற்ற சிறப்புகள் பலப் பல. அண்மையில் பெற்ற சிறப்புகளில் குறிப்பிடத்தக்கது, "லிங்கனும் இன்றைய உலகமும்" என்னும் பொருள் குறித்து அமெரிக்கச் சட்டமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துமாறு அவர் பெற்ற அழைப்பாகும்.

#### கவிஞரின் மனைவி

"மக்கள், ஆம்" என்ற தலைப்பில் தனியற்ற நடையில் அவர் எழுதியுள்ள கவிதை நூல், கவிஞர், அவரது மனைவி ஆகிய இருவரது கருத்துக்களையும் கிட்டத்தட்ட பிரதிபலிப்பதாகக் கவிஞரது மனைவி கூறுகிறார். மக்களுக்குக் காணிக்கையாக்கிய இந்நூலில் நாடோடிக் கதைகள், தோத்திரப் பாடல்கள், கதைகள், பழமொழிகள், கொச்சை வழக்குகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, பல சுவை இன்பம் படைத்துள்ளார். மக்களின் பல வகை அனுபவங்கள், இன்ப துன்பங்களை வெளியிடுகிறது, இந்நூல்.

அமெரிக்க மக்களின் கவிக் குரலாக அறிஞர் சாண்ட்பர்க் ஆற்றி வந்த ஈடு இணையற்ற பெரும் பணிக்கு ஒரு ஏற்ற சான்றாக இன்றும் என்றும் இந்நூல் விளங்கி ஒளி வீசி வரும்.

# எழுத்தாளர்கள் நாடகம்

திரு. அகிலன் அவர்களின் "நெஞ்சின் அலைகள்" அக்காடமி பரிசு பெற்றது. அதனை நாடகமாக்கி திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் 3—9—67 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை திருச்சி தேவர் மன்றத்தில் நடிக்க இருக்கிறார்கள். சங்கத்தின் செயலாளர் திரு. ரா. நீலமேகம் சிறந்ததொரு நாடக டைரக்டருமாவார். வசனம் அமைப்பு திரு. ரா. நீலமேகம் அவர்களே செய்திருக்கிறார்கள்.

சென்ற சில வருடங்களாக திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கம் சிறந்த தொண்டுகள் செய்து சிறப்பு பெற்றிருப்பதை அனைவரும் அறிவார்கள். சங்கத்தின் நல்ல பல அம்சங்கள் நிறைவேற்றவும், சங்கத்தின் வளர்ச்சிக்காகவும் நிரந்தர நிதி ஏற்பாடுசெய்ய வேண்டியது அவசியமாகிறபடியால் இந்நாடகத்தின் மூலம் கிடைக்கும் தொகையை வைத்துக்கொண்டு அவைகளை நிறைவேற்றுவது என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

சங்கத்தின் உறுப்பினர்கள் இதில் பாத்திரமேற்று நடிக்கிறார்கள். இந்நாடகம் பார்ப்பதன் மூலம் இந்நாடகத்திற்கு உதவுவதன் மூலம் தமிழ் எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கு உதவுவதாக அமைகிறது. டிக்கெட் ரூ. 10, 5, 2, 1 வீதம் வைக்கப்பட்டிருக்கிறது. அன்பர்கள் தாங்கள் டிக்கெட்டுகளை விலைகொடுத்து வாங்குவதோடு, தங்கள் நண்பர்களையும் டிக்கெட் வாங்குமாறு செய்து திருச்சி தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கப் பணிக்கு ஊக்கம் தருமாறு வேண்டுகிறோம்.

5ஆம் பக்கத் தொடர்ச்சி

டி.ப.: அப்பனுவது மகனுவது ஏய்யா உங்க தொல்லேயே அதிகமாப் போச்சே ரயில் சும்மா ஓடுதா பையிலே ஏதாவது பணம் இருக்கா எடுய்யா.

பழ: பணம் இருந்தா வாங்காம வருமா அப்பனே இந்தக் கட்டை.

டி.ப. திரும்பவும் அப்பன்னுசொல்றே நடய்யா வெளியே இறங்கு கீழே.

[ரயில் நிற்கும் சப்தம், இறைச்சல்]

இறங்குய்யா கீழே பையைத் தூக்கு, திரும்ப ஏறினே கழுத்தைப் பிடிச்சு தள்ளிடுவேன்.

பழ: எப்படியோ என்னப்பன் ஸ்தலம் வந்து சேர்ந்து விட்டேன். இனி எனக்கு கவலே இல்லே. முருகா எல்லாம் உன் செயல்.

[தாமதம்]

பழ: ஐயா ரொம்ப பசியா இருக்கு, பசி காதடைக்குது ஒரு பத்து பைசா கொடுங்க புண்ணியம் கிடைக்கும்.

குரல்: உனக்கு கொடுத்தா எனக்கு புண்ணியமா கொடுத்து வைச்சவன் மாதிரி கேக்கிறயே; பரதேசிப் பசங்களுக்கு திமிரைப் பாரு, 10 பைசா வேணுமாம்.

பழ: ஐயோ பசி நடக்க முடியலேயே மயக்கம் வருதே, கடவுளே இந்தப் பசியை மனிதனுக்கு ஏன் கொடுத்தே, பசிங்கிற தீராத பிணியை ஏன் கொடுத்தே.

[ஒரு வீட்டிலிருந்து ஒரு சிறுமி சாப்பிட்ட இலேயை வெளியே கொண்டு வந்து போட வருகிறது. இதைப பார்த்த இரண்டு நாய்கள் குரைத்து சண்டைபோட்டுக்கொண்டு குழந்தையின்மேல் தாவி இலேயை இழுத்துக் கொண்டு ஓடுகின்றன. குழந்தை அலறிக் கீழே விழுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் பரதேசி பாய்ந்து வந்து குழந்தையைத் தூக்குகிருன் குழந்தையின் அலறல் கேட்டு கூட்டம் கூடுகிறது. குறிப்பிட்ட ஒலிக் குறிகள் மூலம் காட்சியை விளக்க வேண்டும்].

பழ: ஐயோ குழந்தை கீழே விழுந்து விட்டதே.

குரல்: திருடன் பிடியுங்கள், உதையுங்கள் நல்லா குழந்தையின் சங்கிலியைத் திருடப் பாத்தியா திருட்டுப் பயலே.

பழ: நான் திருடனில்லே, நான் பரதேசி, குழந்தையைக் காப்பாத்த வந்தேன்.

குரல்: பொய், குழந்தையைக் கொல்ல வந்தான், சங்கிலியை எடுக்க. அயோக்கியப் பயல். எடு சங்கிலியை, சாமியார் வேஷமா உனக்கு

கு. 1: இந்தக் காலத்திலே இப்படி வேஷம் போட்டுட்டு வந்துடருங்க, திருடுறதுக்கு.

கு. 2: நல்லா உதைச்சா உள்ளதைச் சொல்லிடுவான், போடுங்க ஆளுக்கு ஒண்ணு.

[அடிக்கும் சப்தம்]

கு. 3: போலீசுலே கொண்டு போய் கொடுங்க, கொடுத்துடுவான்.

பழ: நான் திருடனில்லே, நான் திருடனில்லே, அடிக்காதீங்க, என்னே விட்டுடுங்க.

மகா: இங்கே என்ன கூச்சல், குழப்பம், ஏன் இப்படி அடிக்கிறீங்க போட்டு.

கு. 1: இல்லேம்மா குழந்தை கழுத்திலே இருந்த தங்கச் சங்கிலியைத் திருடி இருக்கான். ஆனு குழந்தைக்கு ஒண்ணும் ஆபத்து இல்லே. அதுக்குள்ளே வந்து பிடிச்சுட்டோம், சங்கிலியை கொடுக்கமாட்டேங்கிருன், இதோபாருங்க, குழந்தை அவன் பிடியிலேயே இருக்குது.

மகா: சங்கிலியா கழுத்திலே சங்கிலி ஒண்ணும் போடலியே.

கு. 2: அப்போ சங்கிலி இல்லேயா

மகா: இல்லேயே ஏன் இப்படி அடிச்சீங்க, பாவம் யாரு இந்தப் பரதேசி.

பழ: தாயே நான் தான் உங்க அடிமை.

மகா: ஐயய்யோ பழநி ஆண்டியா நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தே உனக்கா இந்தக் கதி.

பழ: நீங்க அப்பகாப்பாத்துன ஆண்டியை இப்பவும் காப்பாத்திட்டிங்க தாயே. குழந்தை தெருவிலே இலேயைப் போட வந்த சமயம் தற்செயலா நான் இங்கே வந்தேன். பசிக் கொடுமையிலே அதிலே ஏதாவது கிடைக்குமான்னு எடுக்க வந்தேன். அதுக்குள்ளே இரண்டு நாய்கள் சண்டை போட்டுட்டு குழந்தை மேலேவிழுந்து அதையும் தள்ளிட்டு இலேயையும் இழுத்துட்டு ஓடிடுச்சுங்க. குழந்தையைத் தூக்கினதுக்கு என்னேத் திருடன்னு போட்டு அடிச்சிப்பிட்டாங்க தாயே, நான் திருடனும்.

மகா: அட பாவமே, என்ன கொடுமை.

பழ: அம்மா நான் ஆண்டி தான். ஆனாலும் ஆபத்திலே உதவி செய்யக் கூடாதா தாயே. எனக்கு இதயம் கிடையாதா

குர: சரிப்பா, வாங்க நாம போகலாம். ஏதோ நடந்தது நடந்துட்டுது.

மகா: பழநி நீவருத்தப்படாதே ஏதோ தெரியாத்தனமா நடந்துட்டுது. இனி உனக்கு ஒரு ஆபத்தும் வராது. உன் பிழைப்புக்கு நான் வழி செய்யறேன்.

[தூரத்தில் பழனி ஆண்டவன் கோயில் மணி ஒலிக்கும் சப்தம்]

பழ: தாயே ஆண்டவன் அருளால் உங்களே திரும்பவும் பார்க்கும் பாக்கியம் கிடைச்சுது. அதுவே எனக்கு நிறைவு ஆனுல் எனக்கு இனி புகலிடம் அதோ என்னப்பன் என்னே அழைக்கிருன். என் இதயம் அவனே நாடுகிறது.

[ஆலய மணி பலமாக ஒலித்து ஓய்கிறது].

(காவடிச் சிந்து மெட்டு)

(அறிவிப்புகள்)

— 0 —

Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirappalli-2. Asst. Editor: T. L. Panchapakesan.